**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.184/2025**

2026–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17–ம் நாள் வெள்ளிக்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 17.04.2026 | | |
| பெயர்: | முத்தையன் (PW–2 Chief ) | தகப்பனார் பெயர்: | வீரப்பன் |
| கிராமம்: | மாத்தாம்பட்டினம் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | விவசாயம் | வயது : | 60/2026 |

**முதல் விசாரணை : 17.04.2026**

நான் இவ்வழக்கின் வாதி தரப்பு சாட்சி ஆவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். என்னுடைய சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். என்னுடைய சாட்சியத்தை ஏற்றுக்கொண்டு தக்க உத்தரவிடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :**

வாதி பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். ராணியும், ரோஸ்லின் சகாயமேரியும் ஒரே நபர் தான் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார். நான் வாதிக்கு உறவினரா என்றால் இல்லை, ஆனால், அவரது ஊர்காரர். நான் வாதியின் ஊர்காரர் என்ற காரணத்தால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**